## கடற்கரை கவியரங்கு– 656

நாள்: **07-12-2025**

# நிலையாகு மனமே!

மண்ணில் பிறந்த பின்னே மாந்தர் தமக்கு எத்துனைக் கனவுகள்!
கண்ணில் நிறையும் காட்சி தன்னில் தோய்ந்து மனமே கனவை செய்யும்!
எண்ணியே அக்காட்சியை மனதில் வைத்து, எத்துனைப் பரிணாமம்?
திண்ணமாய் நம்கனவை திகழ்த்திட மனமோ தனிவழி காணும்!

மண்ணில் பிறந்த உயிர்கள் யாவும் தனியேகனவில் மிதந்திடுமோ?
உண்பதற்கன்றித் தேடலை அவைதான் எங்கே கொண்டு எழும்?
மண்பதை யாவுக்கும் மரணம் வரையில் உணவே போராட்டம்!
உண்ணலில் ஒன்றினை யொன்று அழித்தலே உலகின் அறமாகும்!

மண்ணில் யாவும் அழிதல் என்பதே அறமாய் ஆகிடல் ஏனோ?
வண்ணமாய் உலகின் அழகியல் காண்பதும்ஓர்நாள் அழிந்திடுமே!
கண்களின் காட்சி கவிதை யாகலாம் காலத்தில் நிலையாகுமோ?
மண்ணில் பிறந்து மடிவதுதானே உயிர்களின் நிலையாகு தன்றோ!

கண்ணும் கருத்தும் பலகதை கேட்டு நின்ற காலம் தானுண்டே!
கண்ணுற்றாற் போலே மதங்கள் யாவும் காட்சியை நிலை படுத்தும்!
மண்ணில் மாந்தர் அறமாய் வாழ வழங்கிய செய்தியாகுமவையே!
விண்டவர் கண்டிலர் கண்டவர் விண்டிலர் என்பதை அறிவாய் மனமே!

- **கவிஞர் கவிவளவன்.** ஆகிய
  **கு.ப. அசோகன்.** 15-11-2025